CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்
No 6/5, Layards Road, Colombo 05, **Tel:** +094-11 3010664
**Fax**: +094-11 2505228 **E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org

## உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள்- 2018

## தேர்தல் தின அறிக்கை - இல 02

வன்முறைச் சம்பவங்கள் மற்றும் முறைகேடான சம்பவங்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ள போதிலும் இவ் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் பெருமளவில் இடையூறுகளின்றி சுமூகமான முறையில் இடம் பெற்று வருகின்றது. தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது, பகல் 2.00 மணியளவில் மொத்தமாக 111 சம்பவங்களைப் பதிவு செய்துள்ளது. இவற்றுள் 16 சம்பவங்கள் பாரதூரமானதாகவும், 95 சம்பவங்கள் சிறிய சம்பவங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

சுயேட்சை வேட்பாளரான கே. பாஸ்கரன் (கட்சி சின்னம்- மீன்) என்பவர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் அம்பாறை மாவட்டத்திலுள்ள காரைத்தீவு பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மங்கூரிய மாவத்தை சந்தியில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சின்னம் அச்சிடப்பட்ட துண்டு பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்த வேளையில், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் மூன்று ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ் ஆதரவாளர்கள் DBP AAI 6623 என்ற இலக்கத்தை தாங்கிய முச்சக்கரவண்டியில் பயணித்துள்ளனர் என்பதுடன் சீதாவக்க பொலிஸாரினால் பிற்பகல் 12.10 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர். (வாகனம் நீதிமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது)- இரசீது இலக்கம் 354,365/2018.

இன்று காலையில், கொலன்னாவ மாநகர சபைக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடுகின்ற வேட்பாளரான அமனா நிஷாந்தீன், ஹென்றி ஒல்கோட் கல்லூரியிலுள்ள வாக்களிப்பு நிலையத்திற்குள் பல தடவைகள் உள்நுழைந்து வாக்களிப்புச் செயன்முறைக்கு இடையூறு விளைவித்துள்ளார்.

சுமார் முற்பகல் 11.30 மணியளவில் ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் அவர்களுடைய ஆதரவாளர்கள், கொழும்பு மாவட்டத்தின் வாக்களிப்பு நிலையமொன்றான கொடகம சுபாரதி மஹா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திற்கு 50 மீற்றர் தொலைவில் கூடியிருந்தனர். சுமார் 50-75 வரையிலான எண்ணிக்கையில் குழுமியிருந்த இந்நபர்களை பொலிஸார் மற்றும் சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய பொறுப்பதிகாரியினால் கலைக்க முடியாத நிலை காணப்பட்டது.

மாத்தளை மாவட்டத்தின் நாலந்த வட்டாரத்திற்குட்பட்ட *நாலந்த விகாரஸ்தான* வாக்களிப்பு நிலையத்திலுள்ள சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய பொறுப்பதிகாரி, தம்முடைய உதவிக்காக தம்முடன் வருகை தந்த நபர்களை வாக்களிப்பு நிலையத்திற்குள் அனுமதிக்கவில்லை என

மூன்று கண்பார்வையற்ற நபர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். மேலும் இக் கண்பார்வையற்ற நபர்கள் வாக்களிப்பதற்கு சிரேஷ்ட வாக்களிப்பு நிலைய பொறுப்பதிகாரியும் ஏனைய அதிகாரிகளும் உதவியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் ஒரு நபர் மாத்திரம் தன்னுடைய உதவிக்காக அவருடைய தெரிவின் பேரில் ஒருவரை அழைத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

பலுகஸ்தமன மகா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திலிருந்து 400 மீற்றர் தொலைவில், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளின் ஆதரவாளர்கள் குழுக்களாக நின்று கொண்டு தங்களுடைய அரசியற் கட்சிகளுக்கு வாக்களிக்குமாறு வாக்காளர்களிடம் கேட்டு அவர்களை அழுத்தத்திற்கு உட்படுத்தினர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கந்தளே பிரதேச சபைக்கான வேட்பாளர் சம்பிக்க சஞ்சீவ மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் வாக்காளர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகளை செய்துள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது (வாகன இலக்கம் EP- 5051). விக்கினேஷ்வரா வித்தியாலய வாக்களிப்பு நிலையம் மற்றும் அக்ரபோதி தேசிய பாடசலையிலுள்ள வாக்களிப்பு நிலையத்திற்கும் செல்வதற்கே போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கேகாலை மாவட்டத்திலுள்ள அம்பேபுஸ்ஸ வட்டாரத்தின் டட்லி சேனாநாயக்க மஹா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தின் சிரேஷ்ட பொறுப்பதிகாரி, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் கண்காணிப்பாளர் குறிப்பிட்ட வாக்களிப்பு நிலையத்தினுள் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

மணல்குண்டு முஸ்லிம் மஹா வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திலிருந்து 50 மீற்றர் தொலைவில், புத்தளம் மாநகர சபைக்காகப் போட்டியிடுகின்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் ஒருவரான அஸ்கீன் மொஹம்மட் மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் அவ்விடத்திற்கு வருகை தருகின்ற வாக்காளர்களின் மனநிலையை மாற்றுகின்ற வகையில் பிரச்சாரங்களை மேற்கொண்டதனை ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான எப்.ஆர்.எம். முஹுசி அவதானித்துள்ளார். இச்சம்பவம் காலை 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. அத்துடன் காலை 11.45 மணியளவில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர்கள் மற்றும் அவருடைய ஆதரவாளர்கள் வாக்களிப்பு நிலையத்தினுள் பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஒருவரான கோமஸ் கீர்த்தி, இன்று நண்பகல் வேளையில் ஹெட்டிருப்புவ கனிஷ்ட வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தின் முன் அமர்ந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாக்களிப்பு நிலையம் குருனாகல் மாவட்டம், தரலுவல வட்டாரத்திற்குட்பட்டது.

வென்னப்புவ பிரதேச சபைக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாகப் போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவரான அருட்டவலகே டொன் தினுஷ்க இல்லந்த என்பவர் பி.ப 12. 16 மணியளவில், மல்லாவை கனிஷ்ட வித்தியாலய வாக்களிப்பு நிலையத்திற்கு அருகில் நின்று கொண்டு வாக்காளர்களுக்கு இடையூறு விளைவித்ததுடன், ஏனைய கட்சிகள் சார்பாக போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் பற்றித் தவறானக் கருத்துக்களையும் கூறியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.


தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு அனைத்து மாகாணங்களில் இருந்தும் இதுவரை கிடைக்கப்பட்டுள்ள பெரும்பாலான முறைப்பாடுகள், பிரச்சாரம் செய்தல், வாக்காளர்களை முறையற்ற செல்வாக்கிற்கு உட்படுத்துவதற்கான முயற்சிகளை

மேற்கொள்ளுதல், பிரச்சார ஆவணங்களை விநியோகித்தல் மற்றும் காட்சிப்படுத்தல் ஆகியன தொடர்பிலேயே காணப்படுகின்றன.

**தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் கண்காணிப்பு**

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது 1997 ஆம் ஆண்டு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் அரசியல் வன்முறைகளுக்கு எதிரான கூட்டணி ஆகியவற்றின் ஒன்றிணைப்பில், தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களைக் கண்காணிப்பதற்கான, சுயாதீனமான மற்றும் கட்சி சார்பற்ற ஒரு அமைப்பாக ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் மனித உரிமைகள் ஆவண நிலையம் (INFORM) ஆகியவற்றின் ஒன்றிணைவாக செயற்படுகின்றது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் அனைத்து அறிக்கைகளையும் www.cmev.org என்ற வலைத்தளத்தினூடாக அணுகுவதற்கு இயலும்.



கலாநிதி. பா. சரவணமுத்து
இணை அழைப்பாளர்